வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : வான்மதி

தேதி : 15.06.2025 - நேரம் : மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி 5 நாள் அரசு முறை பயணமாக சைப்ரஸ், கனடா, குரோஷியா உள்ளிட்ட நாடுகளுக்கு சென்றுள்ளார்.

குடியரசு துணைத் தலைவர் திரு ஜக்திப் தன்கர் இன்று புதுச்சேரி வந்து சேர்ந்தார்.

உத்தரபிரதேச மாநிலம் லக்னோவில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட 60 ஆயிரம் காவலர்களுக்கு மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

உலக தந்தையர் தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

மோடி 1 (18)

பிரதமர் திரு நரேந்திர மோடி 5 நாள் அரசு முறை பயணமாக சைப்ரஸ், கனடா, குரோஷியா உள்ளிட்ட நாடுகளுக்கு சென்றுள்ளார். தமது 3 நாடுளின் பயணம், எல்லை தாண்டிய பயங்கரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் நடவடிக்கைக்கு உறுதியான ஆதரவை தெரிவித்துள்ள நட்பு நாடுகளுக்கு நன்றி தெரிவிக்கும் வாய்ப்பாக அமையும் என்று பிரதமர் தெரிவித்துள்ளார். கடந்த 20 ஆண்டுகளுக்கு பிறகு சைப்ரசுக்கு செல்லும் முதல் இந்திய பிரதமர் திரு நரேந்திர மோடி என்ற பெருமையையும் அவர் பெறுகிறார். அவரது இந்த பயணத்தின் போது, அந்நாட்டு தலைவர்களுடன் முக்கிய பேச்சுவார்த்தையையும் அவர் நடத்துகிறார். பின்னர், இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவது குறித்து அவர் ஆலோசனை செய்ய உள்ளார். இதனை தொடர்ந்து, கனடா செல்லும் பிரதமர் திரு நரேந்திர மோடி ஜி-7 அமைப்பு மாநாட்டில் பங்கேற்கிறார். இந்த மாநாட்டில் பங்கேற்கும், அமெரிக்கா, இங்கிலாந்து, ஜப்பான், பிரான்ஸ், ஜெர்மனி, கனடா, இத்தாலி ஆகிய 7 நாட்டு தலைவர்களை சந்திக்கும் பிரதமர் அவர்களுடன் சர்வதேச

விவகாரங்கள் குறித்து முக்கிய ஆலோசனை நடத்துகிறார். தமது கனடா பயணத்தை முடித்துக்கொண்டு, குரோஷியா நாட்டிற்கு செல்லும் பிரதமர், அந்நாட்டு தலைவர்களை சந்தித்து முக்கிய பேச்சுவாரத்தை நடத்துகிறார். தமது இந்த 3 நாடுகள்

மோடி 1 (9)

பயணத்தின் போது பிரதமர் திரு நரேந்திர மோடி முக்கிய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறார்.

இந்த பயணத்திற்கு முன்பாக அறிக்கை வெளியிட்டுள்ள பிரதமர், மத்திய தரைக்கடல் மற்றும் ஐரோப்பிய யூனியன் பிராந்தியத்தில், சைப்ரஸ், இந்தியாவின் மிக நெருக்கமான நட்பு நாடாகவும், பங்குதாரர் நாடாகவும் திகழ்கிறது என்று குறிப்பிட்டுள்ளார். வர்த்தகம், முதலீடு, பாதுகாப்பு, தொழில்நுட்பம், மக்களுக்கு இடையிலான பரிவர்த்தனைகளை ஊக்குவித்தல் ஆகிய துறைகளில் இருநாடுகளும் உறவுகளை விரிவாக்கவும், மேம்படுத்தவும், தமது பயணம் ஒரு வாய்ப்பாக அமையும் என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

*தன்கர்* (2)

குடியரசு துணைத் தலைவர் திரு ஜக்திப் தன்கர் 3 நாள் அரசு முறை பயணமாக இன்று புதுச்சேரி வந்து சேர்ந்தார். இதுகுறித்த ஒருசெய்தித்தொகுப்பு.....

*தன்கர் வாய்ஸ் 1* (18)

புதுச்சேரிக்கு இன்று வருகை புரிந்த குடியரசு துணைத் தலைவர் திரு ஜக்திப் தன்கரை, விமான நிலையத்தில் புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு ரங்கசாமி, சட்டப்பேரவை தலைவர் திரு செல்வம், உள்துறை அமைச்சர் திரு நமச்சிவாயம், வேளாண்துறை அமைச்சர் திரு ஜெயக்குமார், சட்டப்பேரவை துணைத் தலைவர் திரு ராஜவேலு, நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு வைத்திலிங்கம், திரு செல்வகணபதி, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு கல்யாணசுந்தரம், திரு பாஸ்கர் (எ) தட்சணாமூர்த்தி, காவல்துறை தலைமை இயக்குநர் திருமதி ஷாலினி சிங், அரசுசெயலர் திரு கேசவன் உள்ளிட்டோர் பூங்கொத்து கொடுத்து வரவேற்றனர். திரு தன்கர் புதுச்சேரி கடற்கரை சாலையில் அமைந்துள்ள உயர்நீதிமன்ற நீதிபதிகள் விருந்தினர் மாளிகையில் இன்றிரவு தங்குகிறார். பின்னர் நாளை பிற்பகல், ஜிப்மர் மருத்துவமனைக்கு புறப்பட்டு செல்லும் அவர், அங்குள்ள அப்துல் கலாம் கலையரங்கத்தில் நடைபெறும் தேசத்தை கட்டி எழுப்புவதில் சுற்றுச்சூழல் நிலைத்தன்மை என்ற தலைப்பில்

நடைபெறும் கருத்தரங்கில் தலைமை விருந்தினராக பங்கேற்று, மாணவ-மாணவியர் மற்றும் பேராசிரியர்களுடன் கலந்துரையாடுகிறார். நாளை மறுதினம் காலாப்பட்டில் அமைந்துள்ள புதுவை பல்கலைக்கழகத்தில் நடைபெறும்

*தன்கர் வாய்ஸ் 2* (11)

நிகழ்ச்சியில் பங்கேற்கும் அவர், மாணவ-மாணவியர் மற்றும் பேராசிரியர்களுடன் கலந்துரையாடுகிறார். பின்னர் அங்கிருந்து புறப்பட்டு, லாஸ்பேட்டை விமான நிலையத்திற்கு செல்லும் திரு தன்கர் ஹெலிகார்டர் மூலம் சென்னை சென்று, அங்கிருந்து விமானம் மூலம் டெல்லி செல்ல உள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. புதுச்சேரியில், குடியரசு தலைவரின் வருகையை ஒட்டி, ஆயிரத்து 500 க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். குடியரசு துணைத் தலைவர் திரு ஜக்திப் தன்கர் கலந்து கொள்ள உள்ள நிகழ்ச்சிகளை முன்னிட்டு, போக்குவரத்தை ஒழுங்குபடுத்துவதற்காக, நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்குள் மாணவர்கள் வீட்டிற்கு செல்லுமாறு, மாநில பள்ளி கல்வித்துறை அறிவுறுத்தி உள்ளது.

*அமித்ஷா காவல்துறை* (5)

உத்தரபிரதேச மாநிலம் லக்னோவில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், மாநில காவல் துறையில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட 60 ஆயிரத்து 244 காவலர்களுக்கு மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா பணிநியமன ஆணைகளை வழங்கினார். இதில், 12 ஆயிரத்து 48 பேர் பெண்கள் ஆவர். இந்நிகழ்ச்சியில் அம்மாநில முதலமைச்சர் திரு யோகி ஆதித்யநாத்தும் பங்கேற்றார்.

*அமித் ஷா கூட்டம் பாஜக* (7)

நாட்டின் பாதுகாப்பிற்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று மத்திய உள்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார். மத்திய பிரதேசத்தில் பாஜக நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்று பேசிய அவர், இந்தியாவின் ஒருமைப்பாட்டிற்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் எந்த முயற்சியும் உறுதியான நடவடிக்கைகள் மூலம் முறியடிக்கப்படும் என்று தெரிவித்தார். கூட்டத்தில், அகமதாபாத் விமான விபத்தில் காலமான குஜராத் மாநில முன்னாள் முதலமைச்சர் விஜய் ரூபானிக்கு அவர் இரங்கல் தெரிவித்தார்.

*தந்தையர் தினம்* (5)

உலக தந்தையர் தினம் இன்று கொண்டாடப்படுகிறது. குழந்தைகள் தங்கள் வாழ்க்கையில் முக்கிய பங்கு வகிக்கும், தந்தையை உணர்வு

ரீதியாகவும், மன ரீதியாகவும் புரிந்து கொள்ளவும், குடும்பத்தில் தந்தையின் முக்கியத்துவதை அறிந்து கொள்ளவும் இந்த நாள் கொண்டாடப்படுகிறது. இது குறித்த ஒருசெய்தித்தொகுப்பு ........

*தந்தையர் தினம் வாய்ஸ்* (13)

தந்தையர் தினம் ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 15 ஆம் தேதி கொண்டாடப்படுகிறது. தந்தையரின் பெருமையை கொண்டாடும் இந்த சிறப்பு நாள் உலகம் முழுவதும், தந்தையர் மற்றும் தந்தை போன்ற பராமரிப்பாளர்களை கௌரவிக்கும் தினமாக கொண்டாடப்படுகிறது. தந்தையரின் பாசத்தையும், வழிகாட்டுதலையும் நினைவுகூறும் வகையில் இத்தினம் அமெரிக்காவில் 20 ஆம் நூற்றாண்டில் தோன்றியது. தற்போது இந்தியா உட்பட 52 நாடுகளில் இந்த தினம் பிரபலமாகி வருகிறது. கனிவான கண்டிப்பையும், மறைமுகமான பாசத்தையும் வெளிப்படுத்தும் தந்தையரிடம், குழந்தைகளுக்கும் பாசம் எப்போதும் குறைந்து போவதில்லை. தந்தையின் கடமைகள் குறித்து திருக்குறளிலும், சங்க இலக்கியங்களிலும் பல கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன. பழங்காலம் தொட்டே நம் தந்தையர்கள் நம்மை எப்படி வளர்த்து ஆளாக்கி உள்ளனர் என்பதனை நாம் ஒருபோதும் மறந்துவிடக் கூடாது என்பதை இந்நாள் நமக்கு நினைவூட்டுகிறது.

*சர்பானந்த சோனோவால்* (13)

வரும் 2029 ஆம் ஆண்டிற்குள் உலகின் 3 வது பெரிய பொருளாதாரமாக மாறும் பாதையில் இந்தியா உறுதியுடன் செல்வதாக மத்திய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனோவால் தெரிவித்துள்ளார். அசாம் மாநிலம் திப்ருகரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பிரதமர் திரு நரேந்திர மோடியின் ஊழலற்ற நல்லாட்சி என்ற அடிப்படையில், கடந்த 11 ஆண்டுகளில் நாட்டின் வளர்ச்சி தடையின்றி முன்னேற்றம் அடைந்துள்ளதாக தெரிவித்தார். கொள்கை முடக்கம், வாரிசு அரசியல் சகாப்தம் முடிவடைந்து, தற்போது வளர்ச்சி பாதையில் இந்தியா பயணித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார். இளைஞர்களின் புத்தாக்கம், வரலாற்று சிறப்பு மிக்க உள்கட்டமைப்பு உருவாக்கம், வறுமை பிடியில் இருந்து 25 கோடி மக்கள் மீட்பு போன்ற நடவடிக்கைகள் பிரதமரின் நல்லாட்சிக்கு எடுத்துக்காட்டுகள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

*பிரல்ஹாத் (9)*

இந்தியாவின் காற்றாலை மின் உற்பத்தி திறன் கடந்த ஆண்டை காட்டிலும், 10.5 சதவிகிதத்திற்கும் மேலாக உயர்ந்து, 51.5 ஜிகாவாட்டாக உயர்ந்துள்ளது என மத்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறை அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார். உலக காற்றாலை தினத்தை ஒட்டி அவர் வெளியிட்டுள்ள செய்தியில், வரும் 2030 ஆம் ஆண்டிற்குள், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தி திறன் 500 ஜிகாவாட் என்ற இலக்கை இந்தியா நிர்ணயித்து உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். கடந்த 11 ஆண்டுகளில் சூரிய மின் உற்பத்தி திறன் குறிப்பிடத்தக்க அளவு வளர்ச்சி அடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

*ராக்கெட் சோதனை (13)*

உத்தரபிரதேசத்தில் முதன் முறையாக ராக்கெட் ஏவும் சோதனையை இஸ்ரோ வெற்றிகரமாக நடத்தியுள்ளது. குஷி நகரில் தனியார் நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் இந்த சோதனை நடைபெற்றதாகவும், ராக்கெட் ஏவுதலின் போது, விண்கலம் 1.1 கிலோ மீட்டர் உயரம் வரை சென்றடைந்தாகவும் இஸ்ரோ தெரிவித்துள்ளது. வரும் அக்டோபர், நவம்பர் மாதத்தில் சுமார் தொள்ளாயிரம் இளைஞர்களால் உருவாக்கப்பட்ட செயற்கை கோள்களை ஏவுவதற்கு, முன்னோடியாக இந்த சோதனை நடைபெற்றுள்ளது. உத்தரபிரதேசத்தில் முதன் முறையாக இந்த ராக்கெட் சோதனை நடைபெற்றுள்ளது என்று இஸ்ரோ விஞ்ஞானி திரு அபிஷேக் சிங் தெரிவித்துள்ளார். அகமதாபாத்தில் டிரோன்களை பயன்படுத்தி நடத்தப்பட்ட முந்தைய சோதனைகளை போல் இல்லாமல், முதன் முறையாக செயற்கை கோள் போன்று ராக்கெட் மூலம் உத்தரபிரதேசத்தில் ஏவப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

*ஆக்சியம் – 4 (9)*

இந்திய விண்வெளி வீரர் சுமான்ஷுசுக்லா மற்றும் இதர வீரர்களுடன் சர்வதேக விண்வெளி நிலையத்திற்கு மேற்கொள்ள இருக்கும் ஆக்சியம் – 4 பயணம் வரும் 19 ஆம் தேதி மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப் பட்டுள்ளது. தொழில்நுட்ப கோளாறு காரணமாக இந்த பயணம் தள்ளி வைக்கப்பட்டிருந்த நிலையில், இது தொடர்பாக தற்போது புதிய அறிவிப்பு வெளியாகி உள்ளது. இஸ்ரோ, ஆக்சியம், ஸ்பேஸ் எக்ஸ் ஆகிய நிறுவனங்களின் ஒருங்கிணைப்பு கூட்டத்திற்கு பிறகு இந்த பயணத்திற்கான புதிய தேதி அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த விண்வெளி பயணம் இந்தியாவிற்கு வரலாற்று முக்கியம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

விமான விபத்து (7)

அகமதாபாத் விமான விபத்தில் பலியானவர்களின் உடல்களை அடையாளம் காண டிஎன்ஏ சோதனை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதுவரை 32 டிஎன்ஏ மாதிரிகள் பொருந்தியுள்ளதாக அம்மாநில உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. இதுவரை 14 உடல்கள் குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. தொடர்ந்து டிஎன்ஏ மாதிரிகளை ஒப்பிடும் பணிகள் நடைபெற்று வருவதாக, அம்மாநில தடய அறிவியல் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.